DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**SC.NO. 34/2026**

Deposition of Witness : P.W.13

| | |
|---|---|
| Name - **திருமதி. சரஸ்வதி** | Father's Name – |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **28.07.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
எதிரிகள் ஆஜர்
**முதல் விசாரணை –**

1. நான் பெரியகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இட்லி கடை நடத்தி வருகிறேன் இறந்து போன பாண்டி என்பவர் எனது மகன். எனது மகன் பாண்டி 10.08.2025ம் தேதியன்று எனது வீட்டில் வைத்து இறந்து விட்டார். அவரது இறப்பை எதிரிகள் ரமேஷ் மற்றும் முத்தையாவும் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள். போலிசார் வந்து எனது மகன் பாண்டி எப்படி இறந்தார் என்று கேட்டார்கள். 1,2 எதிரிகளுடன் எனது மகன் 10.08.2025ம் தேதியன்று இரவு மது அருந்தியதாகவும், மது அருந்திவிட்டு எனது மகன் பாண்டியை எனது வீட்டில் கொண்டு வந்துவிட்டார்கள். திரும்பவும் எதிரிகள் போன் செய்த போது எனது மகன் பாண்டி வெளியே சென்றுவிட்டார்.

2. மீண்டும் 1,2ம் எதிரிகள் எனது மகனை நிரம்ப போதையில் கொண்டு வந்து விட்டார்கள். காலை 05.00 மணிக்கு எனது மகனை நான் போய் பார்க்கும்போது அவர் இறந்துகிடந்தார். அன்றிரவு எனக்கு உதவியாக துளசிமணி இருந்தார். அதன்பிறகு அடுத்தநாள் 1,2 எதிரிகள் துளசிமணியை கொன்று விட்டதாக சொன்னார்கள், ஆனால் வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

துளசிமணி எப்படி இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.28 17:29:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.